**தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்**
**(சுருக்கம்)**

படிகள் – அகவிலைப்படி – தமிழ்நாடு மின் பகிர்மான கழகம், தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம், தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழக பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு 01.01.2026 முதற்கொண்டு உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வீதம் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**(செயலகக் கிளை)**

**(நிலை) முழு வாரிய தமிழ்நாடு மின் பகிர்மான கழக செயல்முறை ஆணை எண்.10, நாள்: 22.05.2026.**

வைகாசி – 8-ம் நாள்,
பராபவ வருடம்,
திருவள்ளுவர் ஆண்டு 2057.

படிக்கப்பட்டது:

1. (நிலை) முழு வாரிய தமிழ்நாடு மின் பகிர்மான கழக செயல்முறை ஆணை எண்.43, (செ.கி) நாள்: 26.11.2025.
2. அரசாணை (நிலை) எண்.97, நிதி (படிகள்) துறை, நாள்: 14.05.2026.

*****

**செயல்முறைகள்:**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின் பகிர்மான கழக செயல்முறை ஆணையில் வாரியத்தின் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு திருத்தப்பட்ட அகவிலைப்படி கீழ்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது :–

| எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | அகவிலைப்படி வீதம் (மாதத்திற்கு) |
|---|---|
| 01.07.2025 | அடிப்படை ஊதியத்தில் 58 சதவீதம் |

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு ஆணையில், 01.01.2026 முதற்கொண்டு மாநில அரசு பணியாளர்களுக்கு கீழ்கண்ட திருத்தப்பட்ட வீதத்தில் அகவிலைப்படி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது:–

| எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | அகவிலைப்படி வீதம் (மாதத்திற்கு) |
|---|---|
| 01.01.2026 | அடிப்படை ஊதியத்தில் 60 சதவீதம் |

மேற்படி உயர்த்தப்பட்ட அகவிலைப்படி 01.01.2026 முதற்கொண்டு வழங்கப்படும் என்றும், ஜனவரி 2026 முதல் ஏப்ரல் 2026 வரையிலான அகவிலைப்படி நிலுவைத் தொகையினை பணமில்லா பரிவர்த்தனை முறை மின்னணு தீர்வு சேவை மூலம் வழங்கப்படும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

3. தமிழ்நாடு மின் பகிர்மான கழகமானது, தமிழ்நாடு அரசின் மேற்காணும் ஆணையினைப் பின்பற்றி, தமிழ்நாடு மின் பகிர்மான கழகம், தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம், தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழக பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு அகவிலைப்படியைக் கீழ்கண்டவாறு உயர்த்தி வழங்கிட ஆணையிடுகிறது:-

| எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | அகவிலைப்படி வீதம் (மாதத்திற்கு) |
|---|---|
| 01.01.2026 | அடிப்படை ஊதியத்தில் 60 சதவீதம் |

மேலும், மேற்படி 01.01.2026 முதல் உயர்த்தப்பட்ட அகவிலைப்படியினை ஜனவரி 2026 முதல் ஏப்ரல் 2026 வரையிலான நிலுவைத் தொகையினை பணமில்லா பரிவர்த்தனை முறை மின்னணு தீர்வு சேவை (ECS) மூலம் மே 2026 மாத ஊதியத்துடன் வழங்கப்படும்.

4. அனுமதிக்கத்தக்க உயர்த்தப்பட்ட அகவிலைப்படியினைக் கணக்கிட அடிப்படை ஊதியத்துடன் தனிப்பட்ட ஊதியத்தையும் (Personal Pay) சேர்த்துக்கொள்ள வேண்டும். திருத்தப்பட்ட அகவிலைப்படியைக் கணக்கிடுகையில், ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை, அதாவது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின், அதனை அடுத்த ஒரு ரூபாயாகக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அதுவே, 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அதனைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

5. மேலே அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி தற்போது அகவிலைப்படி பெறும் முழுநேர பணியாளர்களுக்கும், அலுவலர்களுக்கும், மற்றும் திருத்தப்பட்ட ஊதிய விகிதம் ரூ.4,100–12,500 பெறும் பணியாளர்களுக்கும் அனுமதிக்கத்தக்கதாகும்.

**(வாரியத்தின் ஆணைப்படி)**

**ஜெ. ராதாகிருஷ்ணன்**
**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்**

**பெறுநர்**

அனைத்து தலைமைப் பொறியாளர்கள்.
அனைத்து தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர்கள்/தமிழ்நாடு மின் பகிர்மான கழகம், தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம், தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம்.
தலைமை உட்தணிக்கை அலுவலர்/தணிக்கைக் கிளை.
அனைத்து மேற்பார்வை பொறியாளர்கள்.
அனைத்து துணைச் செயலர்கள், செயலகக்கிளை.
தன்னகத் தணிக்கை அலுவலர் (மாநில கணக்கு துறைத் தலைவர்).

**நகல்:-**

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் பார்வைக்கு.
கூடுதல் காவல் துறை இயக்குநர்/விழிப்புப்பணி.
மேலாண்மை இயக்குநர்/தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்.
மேலாண்மை இயக்குநர்/தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகம்.

மேலாண்மை இயக்குநர்/தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம்.
அனைத்து இயக்குநர்கள்/தமிழ்நாடு மின் பகிர்மான கழகம், தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம், தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம்.
செயலாளர்/தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்.
சட்ட ஆலோசகர்/தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்.
நிறுவன செயலாளர்/தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்.
நேர்முக உதவியாளர்/தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அலுவலகம்.
நேர்முக உதவியாளர்/மேலாண்மை இயக்குநர் (தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்) அலுவலகம்.
நேர்முக உதவியாளர்/மேலாண்மை இயக்குநர் (தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகம்) அலுவலகம்.
துணை தலைமைப் பொறியாளர்/நிர்வாகக் கிளை.
முதுநிலை பணித்தொகுதி அலுவலர்கள்/நிர்வாகக் கிளை.
தொழில் உறவு ஆலோசகர்.
மருத்துவ அலுவலர், தலைமையிட மருந்தகம்.
அனைத்து அலுவலர்கள், பிரிவுகள்/செயலகக்கிளை.
இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு , தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
உறைவிட மேலாளர்/புதுதில்லி.
உதவி பணித்தொகுதி அலுவலர்/தமிழ் வளர்ச்சி/த.நா.மி.வா. இதழில் பிரசுரிப்பதற்காக.
டி.என்.பி.எப்.சி – டவர் எண்.490/3–4, அண்ணா சாலை, நந்தனம், சென்னை–35
தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, ஈ.வி.கே.சம்பத் மாளிகை, 5 வது மாடி, கல்லூரி சாலை, சென்னை–6.
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 4வது தளம், சிட்கோ நிறுவன அலுவலக கட்டிடம், திரு.வி.க தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை–600 032.
தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர் சம்மேளனம்.
தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்.
தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்
தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு.
மின்சாரப் பிரிவு அண்ணா தொழிற் சங்கம்.
தமிழ்நாடு மின் வாரிய ஜனதா தொழிலாளர் சங்கம்.
தமிழ்நாடு தேசிய மின் தொழிலாளர் சம்மேளனம் (இரண்டு பிரிவுகள்)
தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர் சங்கம்.
தமிழ்நாடு மின் ஊழியர் காங்கிரஸ்.
தமிழ்நாடு மின் வாரிய தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம்.
தமிழ்நாடு மின் வாரிய பொறியாளர் கழகம்.
தமிழ்நாடு மின் வாரிய நிதி மற்றும் கணக்கு அலுவலர் சங்கம்.
பாரதிய மின் தொழிலாளர் சம்மேளனம்.
தமிழ்நாடு மின் வாரிய கார்டு பில்லிங் ஸ்டாப் சங்கம்.
தமிழ்நாடு மின் வாரிய டாக்டர் அம்பேத்கார் எம்ப்ளாயீஸ் யூனியன்.
தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் யூனியன்.
தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன்.
தமிழ்நாடு மின்சார வாரிய பாட்டாளி தொழிற்சங்கம்.
பாரதிய மின் பொறியாளர் கழகம்.

**//உண்மை நகல் // உத்தரவின்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர் 22/5/2026